# கடலூர் பெருநகராட்சி

**2019ம் ஆண்டு மே மாதம் 31–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.05.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

***பொருட்கள்***

| | |
|---|---|
| **1)** | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் **37,38,39** கோரி, சிங்காரத் தோப்பு மற்றும் சோனங்குப்பம் பகுதிகளில் உள்ள பகிர்மணக்குழாய்கள் பழைய M.S பைப் 150mm பழுதடைந்து விட்டது. இதனால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிப்படைந்து அடிக்கடி இடையூராக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி புதியதாக 160mm HDPE பைப் மற்றும் 150mm DI pipe முறையே **330**m மற்றும் **20**மீட்டர் நீளத்திற்கு மாற்றியமைக்க ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. **9,50,000/–** க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் |
| **2)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மகாலட்சுமி தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு புதியதாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 6259/ 2019ல் வழக்கு தொடர்ந்துள்ளதால், கடலூர் பெருநகராட்சி ஆணையர் அவர்கள் சார்பாக வழக்கினை ஏற்று நடத்தி வரும் திரு.பி.ஆனந்த், வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் **ரூ.15,000/–** நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். **(2732/19/அ4)** |
| **3)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மகாலட்சுமி நர்சரி பள்ளி நிறுவனத்திற்கு புதியதாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 9306/ 2019ல் வழக்கு தொடர்ந்துள்ளதால், இந்நகராட்சி சார்பாக வழக்கினை ஏற்று நடத்தி வரும் திரு.பி.சீனுவாசன், வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் **ரூ.15,000/–** நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். **(3259/19/அ4)** |
| **4)** | கடலூர் பெருநகராட்சி திருப்பாப்புலியூர் பேருந்து நிலையம் புதிய வணிக வளாகம் தரைக் கடைகளுக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் **25.11.2013**ம் தேதிய நீதிப் பேராணை எண் **1175/11**ன் தீர்ப்பின்படி ஏற்கனவே கடையை வைத்திருந்தவர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. இக்கடைகளை ஒப்படைக்கும் பொழுது ஒருவருட வாடகை செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் (நிபந்தனைகள் வரிசை எண் 3) உரிம உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.<br>உரிம உத்திரவு வரிசை எண் **3**ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி ஒருவருட வாடகையாக கூடுதல் வைப்புத் தொகை செலுத்த ந.க. எண் **3868/2006/அ2** நாள் **19.03.2018, 04.06.2018** மற்றும் **03.08.2018**ல் அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வறிவிப்பினை |

பெற்றுக் கொண்டு, நிபந்ததனயுடன் செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை ஏதும் செலுத்தாமல், சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள நகராட்சி கடைகளின் உரிமம் பெற்று அனுபவித்து வருபவர்களால் வழக்கு தொடரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | நீதிப்பேராணை எண் | பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|
| 1 | 16 | 4679 / 19 | வரலட்சுமி, த/பெ. ஜம்புகேஸ்வரன் |
| 2 | 27 B | 4683 / 19 | வரலட்சுமி, த/பெ. ஜம்புகேஸ்வரன் |
| 3 | 1, 2 | 4686 / 19 | வினோத்குமார், த/பெ.மதியழகன் |
| 4 | 26 | 4687 / 19 | சிவக்குமார் |
| 5 | 18 | 4688 / 19 | ஜீவரட்சகன் |
| 6 | 14 | 4691 / 19 | உமா, க/பெ. ஏ.ஜி.ராஜேந்திரன் |
| 7 | 5 | 4692 / 19 | எஸ்.வைத்தியநாதன் |
| 8 | 32 | 4694 / 19 | எச்.எலியாஸ் |
| 9 | 6 | 4695 / 19 | ஏ.மல்லிகாம்மாள் |
| 10 | 31 | 4696 / 19 | ஆர்.கஸ்தூரி |
| 11 | 33 | 4697 / 19 | கே.ரவிச்சந்திரன் |
| 12 | 15 | 4699 / 19 | உமா, க/பெ. ஏ.ஜி.ராஜேந்திரன் |
| 13 | 34 | 4702 / 19 | எஸ்.பாரிவேந்தன் |

மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகிய சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்கள் தனது 04.03.2019–ம் தேதிய கடிதத்தில் ஒரு வழக்கிற்கு ரூ.10000/– வீதம் ரூ.130000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** அ) அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகை ரூ.130000/–ஐ வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். **(3868/2006/அ2)**

**5)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 41, குத்தூசி குருசாமி சாலையில் திரு.பாலசுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு சொத்துவரி எண் 093/041/00240 வரிவிதிப்பு செய்யப்பட்டு 2000–01 முதல் 2018–19 வரை வரித்தொகை நிலுவை இருப்பதால் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டது. அதனை எதிர்த்து திரு.பாலசுப்பிரமணியன் என்பவரின் மனைவி திருமதி.விஜயலட்சுமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.7509/ 2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.
மேற்கண்ட வழக்கில் நகராட்சி ஆணையர் சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்தி வருவதால் வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/– நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம். **(2727/2019/ அ4)**

**6)** கடலூர் பெருநகராட்சி மஞ்சக்குப்பம் பகுதியில் வார்டு எண் 1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் புதை வடிகால் திட்ட ஆட்குழிகளின் மூடிகள் உடைந்து பொதுமக்களுக்கு விபத்தினை ஏற்படுத்துவதாலும், இவ்வுடைப்பின் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு அடைப்பு ஏற்படுவதாலும், நெடுஞ்சாலை பகுதிகளில் உள்ள ஆட்குழிகள் உயர்த்தபடாத காரணத்தால் ஆட்குழிகள் மீது தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாலும், அடைப்புகள் ஏற்படும் போது மேற்கண்ட

காரணத்தினால் அடைப்புகளை சரி செய்ய முடியவில்லை. எனவே உடைந்துள்ள ஆட்குழி மூடிகளை புதியதாக அமைத்திடவும், சாலையின் மட்டத்திற்கு ஆட்குழிகளை உயர்த்திடவும் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**7)** கடலூர் பெருநகராட்சி திருப்பாதிரிப்புலியூர் பகுதி வார்டு எண் 16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் உள்ள புதை வடிகால் திட்ட ஆட்குழிகளின் மூடிகள் உடைந்து பொதுமக்களுக்கு விபத்தினை ஏற்படுத்துவதாலும், இவ்வுடைப்பின் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு அடைப்பு ஏற்படுவதாலும் நெடுஞ்சாலை பகுதிகளில் உள்ள ஆட்குழிகள் உயர்த்தபடாத காரணத்தால் ஆட்குழிகள் மீது தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாலும், அடைப்புகள் ஏற்படும் போது மேற்கண்ட காரணத்தினால் அடைப்புகளை சரி செய்ய முடியவில்லை. எனவே உடைந்துள்ள ஆட்குழி மூடிகளை புதியதாக அமைத்திடவும், சாலையின் மட்டத்திற்கு ஆட்குழிகளை உயர்த்திடவும் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்

**8)** கடலூர் பெருநகராட்சி முதுகநர் பகுதி வார்டு எண் 31 முதல் 45 வரை உள்ள பகுதிகளில் புதை வடிகால் திட்ட ஆட்குழிகளின் மூடிகள் உடைந்து பொதுமக்களுக்கு விபத்தினை ஏற்படுத்துவதாலும், இவ்வுடைப்பின் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு அடைப்பு ஏற்படுவதாலும், நெடுஞ்சாலை பகுதிகளில் உள்ள ஆட்குழிகள் உயர்த்தபடாத காரணத்தால் ஆட்குழிகள் மீது தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாலும், அடைப்புகள் ஏற்படும் போது மேற்கண்ட காரணத்தினால் அடைப்புகளை சரி செய்ய முடியவில்லை. எனவே உடைந்துள்ள ஆட்குழி மூடிகளை புதியதாக அமைத்திடவும், சாலையின் மட்டத்திற்கு ஆட்குழிகளை உயர்த்திடவும் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்

**9)** கடலூர் பெருநகராட்சி திருப்பாதிரிப்புலியூர் பகுதி வார்டு எண் 16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் சேதமடைந்த புதை வடிகால் ஆட்குழி மூடிகளை புதியதாக அமைத்திடவும் மற்றும் சாலையின் மட்டத்திற்கு ஆட்குழிகளை உயர்த்தும் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 25.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. D. வசந்தா, கடலூர். | 0.03% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 1.05% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. D. வசந்தா, கடலூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.03% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. D. வசந்தா, கடலூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

10) கடலூர் பெருநகராட்சி முதுநகர் பகுதி வார்டு எண் 31 முதல் 45 வரை உள்ள பகுதிகளில் சேதமடைந்த புதை வடிகால் ஆட்குழி மூடிகளை புதியதாக அமைத்திடவும் மற்றும் சாலையின் மட்டத்திற்கு ஆட்குழிகளை உயர்த்தும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 25.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. D. வசந்தா, கடலூர். | 0.03% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 0.96% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி, D, வசந்தா, கடலூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.03% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி, D, வசந்தா, கடலூர்.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

11) கடலூர் பெருநகராட்சி மஞ்சக்குப்பம் பகுதி வார்டு எண் 1 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் சேதமடைந்த புதை வடிகால் ஆட்குழி மூடிகளை புதியதாக அமைத்திடவும் மற்றும் சாலையின் மட்டத்திற்கு ஆட்குழிகளை உயர்த்தும் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 25.02.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. D. வசந்தா, கடலூர். | 0.04% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 1.09% மதிப்பீட்டை விட அதிகம். |

| | |
|---|---|
| | மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. D. வசந்தா, கடலூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.04% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. D. வசந்தா, கடலூர்.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **12)** | **ஒரு முறையே பயன்படுத்தும் நெகிழி பயன்பாட்டினை தடை செய்ய உபவிதிகள் அமல்படுத்துவது குறித்து அறிக்கை.**<br>**2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கிழ் ஏற்படுத்தும் உபவிதிகள்.**<br><br>1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 306–ன் படியும் 2016ம் வருடத்திய பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் விதி 6(4)ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்<br>சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986(சட்டம் எண்.29/1986)–ல் பிரிவு 3,6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–ன் படி 2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் நெகிழி (Plastic) மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல் நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உபவிதிகள் ஏற்படுத்தலாம்.<br>I (i) **செயலாக்க அதிகாரி :** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.<br>(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி :** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர்,நகர நல அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்கள் ஆவர்.<br>(iii) **மேல் முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல்முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.<br>(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள் :** ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருட்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள் மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள்<br><br>**(v) வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**<br>1. மொத்த சேகரிப்பாளர்/ விநியோகிப்பாளர்<br>a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்<br>b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்<br>c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்<br>d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்<br>e) 2000 –ம் அதற்கும் மேல் |

2. வணிக வளாகங்கள் :

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்,

b) பல்பொருள் அங்காடிகள் பெரியது,

c) திரையரங்குகள்,

d) அரசு மதுபானக் கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ் மன்றம் முதலான இதர இனங்கள்,

e) கல்வி நிறுவன வளாகங்கள்,

f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் வளாகங்கள்,

3. திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை,பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்,மளிகை கடைகள், காய்கறிக் கடைகள், பழக் கடைகள், மருந்துக் கடைகள், உணவகங்கள், பழச்சாறு விற்பனை கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் முதலானவைகள்

4. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைக்காரர்கள், இதர வணிகம் செய்பவர்கள்

## II தண்டனைகள் விபரம்

பிரிவு 306 (28–A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிமுறைகளை மீறுவதற்கான தண்டனைகள்

| வ. எண் | குற்றங்கள் | முதல் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.10,000/- பத்தாயிரம் ரூபாய் | ரூ. 25,000/- இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ரூ. 50,000/- ஐம்பதாயிரம் ரூபாய் |
| 2 | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப் பெரிய வணிக நிறுவனங்களில் மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.5,000/- ஐந்தாயிரம் ரூபாய் | ரூ. 10,000/- பத்தாயிரம் ரூபாய் | ரூ. 25,000/- இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3 | மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தக் கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 1000/- ஓராயிரம் ரூபாய் | ரூ. 2000/- இரண்டாயிரம் ரூபாய் | ரூ. 5000/- ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தக்கூடிய மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 100/- ஒருநூறு ரூபாய் | ரூ. 200/- இருநூறுரூபாய் | ரூ. 500/- ஐநூறு ரூபாய் |

| | |
|---|---|
| அ.கு. | பொது சுகாதார நலன் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்காணும் பணத்தண்டம் தொகைகளை வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 938 /2019/H1 ) |
| 13) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 45 வரை நகராட்சி மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் செய்யப்படும் 7 இடங்களில் திரவ குளோரின் கருவி பொருத்தப்பட்டு பொது மக்களுக்கு குளோரின் கலந்த குடிநீர் விநியோகம் செய்ய 6 மாதங்களுக்கு 81,000 லிட்டர் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் 11.74 இலட்சத்திற்கு மன்ற தீர்மான எண் 2101 நாள் 28.02.2018–ல் அனுமதி பெறப்பட்டு 07.03.2018–ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, மன்றத் தீர்மான எண் 2134 நாள். 28.03.2019–ல் அனுமதி பெறப்பட்டு திருமதி. நவநீதம், கடலூர் என்ற ஒப்பந்தாரருக்கு வேலையுத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது குளோரின் இருப்பு இல்லாததால், தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாமையால் ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் திருமதி. நவநீதம், கடலூர் அவர்கள் அளித்த அதே விலை விகிதத்திற்கு 15000 லிட்டர் திரவ குளோரின் கொள்முதல் செய்யவும், இதற்கான தோரய செலவினம் ரூ.2,17,500/–க்கும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசரம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். |
| 14) | கடலூர் பெருநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து பணிமாறுதலில் சென்று 31.05.2018ல் பல்லவபுரம் நகராட்சியில் ஓய்வு பெற்ற திருமதி.மரகதம் சீனிவாசன் அவர்களுக்கு 5வது ஊதியக்குழு நிலுவைத்தொகை 01.06.1988 முதல் 31.05.1989 வரை நிர்ணயம் செய்து, சேம நல நிதி நிலுவைத் தொகைக்கு வட்டித் தொகை ஓய்வு பெற்ற நாள் வரை நிர்ணயம் செய்து நகராட்சி வழங்கப்பட வேண்டும். 5வது ஊதியக்குழு நிலுவைத் தொகைகள் சேமநலநிதி கணக்கில் வரவு வைக்கப்படாமல் பொதுநிதியிலேயே வைக்கப்பட்டுள்ளது. எனவே திருமதி.மரகதம் சீனிவாசன் , ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 5வது ஊதியக்குழு நிலுவைத் தொகை மற்றும் வட்டித் தொகை ரூ.1,20,692/– (ரூ.9459/– + 1,11,233/–) பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | |
| 15) | கடலூர் பெருநகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் திரு.எஸ்.ஆறுமுகம் என்பவருக்கு தன் குடும்பநிலை மற்றும் உடல்நிலை கருதி சொந்த ஊரான விருத்தாசலம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்து தருமாறு கோரியுள்ளார். விருத்தாசலம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்து தரக் கோரி நகர்மன்றத் தீர்மானம் அனுப்ப கோரும் திரு.எஸ்.ஆறுமுகம், துப்புரவு பணி மேற்பார்வையாளரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | திரு.எஸ்.ஆறுமுகம், துப்புரவு பணி மேற்பார்வையாளரின் குடும்ப சூழ்நிலை கருதி அன்னாரை விருத்தாசலம் நகராட்சிக்கு பணி மாறுதலில் செல்ல ஆட்சேபணை இல்லை என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கலாம். |
| 16) | கடலூர் பெருநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திருமதி.வாணி என்பவருக்கு தன் குடும்பநிலை மற்றும் உடல்நிலை கருதி சொந்த ஊரான கடலூர் பெருநகராட்சிக்கு பணி மாறுதல் செய்து தருமாறு கோரியுள்ளார். கடலூர் பெருநகராட்சிக்கு பணி மாறுதல் செய்து தரக் |

| | |
|---|---|
| | கோரி நகர்மன்றத் தீர்மானம் அனுப்ப கோரும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடித எண் ந.க. 76/2018/ அ3 நாள் 08.05.2019 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | கடலூர் பெருநகராட்சியில் 220 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளதால், காலிப் பணியிடத்திற்கு பணி மாறுதல் கோரும் திருமதி.வாணி, க/பெ.சின்னாள் என்பவர் கடலூர் பெருநகராட்சிக்கு பணி மாறுதலில் வருவதற்கு ஆட்சேபணை இல்லை என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கலாம். |
| 17) | கடலூர் பெருநகராட்சிக்கு எதிராக கடலூர் நீதிமன்றங்களிலும், சென்னை உயர்நீதி மன்றத்திலும் நகரமைப்பு பிரிவில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு வருகிறது. அவ்வாறு தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கு வழக்கு கட்டணம் வழங்க அதற்காக 2019–20 ம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | நகரமைப்பு பிரிவில் 2019–20ம் ஆண்டிற்கு வழக்கு செலவினமாக ரூ.4.00 இலட்சம் பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம். (4479/ 2019/ எப் 1) |
| 18) | கடலூர் பெருநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சிறப்பு சேமநலநிதி சந்தாத் தொகை தலா ஒரு நபருக்கு ரூ.20/– வீதம் 148 மாதங்கள் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. 2019–20 ம் ஆண்டு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகையுடன், நகராட்சி பங்குத் தொகை ரூ.10000/–ம் வழங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். |
| 19) | கடலூர் பெருநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சிறப்பு சேமநலநிதி சந்தாத் தொகை தலா ஒரு நபருக்கு ரூ.20/– வீதம் 148 மாதங்கள் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. 2018–19 ம் ஆண்டு ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகையுடன், நகராட்சி பங்குத் தொகை ரூ.10000/–ம் வழங்குவதற்கும், மேலும் 2015–16 முதல் 2018–19 வரை இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா மற்றும் வட்டித் தொகை வழங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். |
| 20) | கடலூர் பெருநகராட்சி நிர்வாகத்தை எதிர்த்து திரு.கு.ராமன், முன்னாள் உதவியாளர் (து.ப.நீ.) என்பவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 23159/ 2018 மூலம் ரிட் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் எதிர்வாதுரை செய்து தொடர் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக திரு.ஏழுமலை என்ற அரசு வழக்கறிஞர் மூலம் வக்காலத்து அனுப்பி வைக்கப்பட்டது.<br>மேற்படி அரசு வழக்கறிஞருக்கு கட்டணம் ரூ.15000/– செலுத்தவும், ரூ.3000/– நீதிமன்ற பணிகளுக்கு செலவு தொகைக்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |

**அ.கு.** அனுமதிக்கலாம்.

**21)** கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 03.07.2007ம் தேதிய அரசாணை நிலை எண் 92ன்படி 9 ஆண்டுகள் முடிவடைந்த கடலூர் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கடைகளுக்கும் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நிலையில் உயர்த்தப்பட்ட வாடகையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள குத்தகைதாரர்களால் நகராட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆனந்தன் அவர்கள் ஆஜராகியுள்ளார்கள்.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை அனுபவதாரர்களின் பெயர் திருவாளர்கள் | நீதிப்பேராணை எண் |
|---|---|---|---|
| 1 | 858 | எஸ்.ஹாரூன் ரஷீத் | 4348 /2019 |
| 2 | 435 | டி.கே.கோவிந்தராஜ் | 4392 /2019 |
| 3 | 460 | ஆர்.சாந்தி | 4349 /2019 |
| 4 | 464 | வி.எம்.சுல்தான் | 4355 /2019 |
| 5 | 442 | ஆர்.உமா | 4395 /2019 |
| 6 | 441 | ஜி.எம்.வெங்கடேஷ் | 4361 /2019 |
| 7 | 395 | ஜெ.வரலட்சுமி | 4369 /2019 |
| 8 | 843 | ஏ.ஜி.ராஜேந்திரன் | 4345 /2019 |
| 9 | 393 | முகமது கனி அம்பலம் | 4357 /2019 |
| 10 | 459 | சி.ஏ.ரஹீம் | 4366 /2019 |
| 11 | 466 | பி.காவேரி | 4351 /2019 |
| 12 | 463 | எஸ்.தாட்சாயினி | 4363 /2019 |
| 13 | 829 | அடைக்கலசாமி | 4360 /2019 |
| 14 | .. | கார்த்திகா | 8100 /2019 |
| 15 | .. | கே.செல்வராஜன் | 8102 /2019 |
| 16 | .. | கே.குமார் | 8103 /2019 |
| 17 | 467 | கே,தனலட்சுமி | 4353 /2019 |
| 18 | | Legal Opinion dt.6.2.19 | |

திரு.பி.ஆனந்தன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மேற்கண்ட ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.10,000/– வீதம் 17 வழக்குகளுக்கு ரூ.170000/–ம், மற்றும் சட்ட ஆலோசனை வழங்கியதற்கு ரூ.5000/– ஆக மொத்தம் ரூ.175000/– வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** அ) அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**22)** கடலூர் பெருநகராட்சி 2018–19ம் ஆண்டுக்கு வரி மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு பதிவேடுகள் பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்து தணிக்கைக்கு உட்படுத்திடவும், மேலும் 2019–2020ம் ஆண்டுக்கான வரி மற்றும் வரியில்லா இனங்களின் கேட்பு அறிவிப்புகள் மற்றும் வருவாய் உதவியாளர்களின் கையேடுகள் பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்ய ஆகும் செலவினங்களுக்கு 02.05.19 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | ரூபாய் ஜிஎஸ்டி நீங்கலாக | |
|---|---|---|---|---|
| 1 | Manju Xerox, Cuddalore Printing Binding | 1000 /1 | 800 | 50 |
| 2 | GR Solutions, Cuddalore | 1000 /1 | 900 | 60 |
| 3 | Coral Systems, Cuddalore | 1000 /1 | 10000 | 70 |

**அ.கு.** வரிசை எண் 1ல் கண்ட Manju Xerox நிறுவனம் வழங்கியுள்ள குறைவான விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(3682/ 2019/ அ1)**

**23)** கடலூர் பெருநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 15.10.1995–ல் பணியிடை காலமான திருமதி.மண்ணாங்கட்டி, க/பெ.அல்லிமுத்து என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் பயன்கள் வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை அவர்களின் அதிகாரமளிப்பு கடிதம் வழங்கப் பெற்ற நிலையில் திரு.அல்லிமுத்து அவர்கள் 28.12.1996ல் இறந்து விட்ட அன்னாரது மகன் திரு.பிச்சாண்டி அவர்களுக்கு அவரது தாயாரின் இறப்புக்கான பணப்பயன்கள் பணிக்கொடை ரூ.9576/– மற்றும் 16.10.1995 முதல் 30.09.2004 வரையிலான காலத்திற்கு குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகை ரூ.1,89,531/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** அனுமதிக்கலாம்.

**24)** கடலூர் பெருநகராட்சி 2019 உள்ளாட்சி தேர்தலுக்கு மாநில தேர்தல் ஆணைய கடிதம் ந.க. எண் 4311/2018 தேபொ1 நாள் 28.02.2019ன்படி, வார்டு மறுவரையறை செய்யப்பட்ட தெருக்களின் அடிப்படையில் தொடர்புள்ள வார்டுகளுக்கு வாக்குச்சாவடிகள் அமைக்க அறிவுறுத்தப்பட்டதில், கடலூர் பெருநகராட்சி 45 வார்டுகளுக்கு 127 வாக்குச்சாவடிகள் அமைக்க வரைவு பட்டியல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதலுக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அறிவுரைகளின்படி வரைவு வாக்குசாவடி பட்டியல்கள் பொதுமக்கள் பார்வைக்கு உட்படுத்தப்பட்டதில், கீழ்க்காணும் விபரம் கொண்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

| வ. எண் | மனுதாரரின் பெயர் மற்றும் விலாசம் மனு பெறப்பட்ட நாள் | வாக்குச்சாவடி எண் / வார்டு எண் / வாக்குச்சாவடியின் பெயர் / இடம் | மனுவின் சுருக்கம் | ஏற்றுக் கொள்ளப்பட்டது / நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. ARC நாகராஜ், திருப்பாப்புலியூர்<br><br>நாள் 29.04.2019 | 37ஆண், 37பெண் மற்றும் 38அ.வா. சுப்ராயலு நகர், திருப்பாபுலியூர் | வார்டு மறுவரையறைக்கு பின்னர் வார்டு எண்.23ஆக மாற்றப்பட்டுள்ளது. தற்போது அமைக்கப்பட்டுள்ள தனியார் பள்ளி வாக்குசாவடியை சுப்ராயலு நகர் டான்சிக்கு மாற்ற கோரப்பட்டுள்ளது. | மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. வாக்குச்சாவடி எண் 37 ஆ மற்றும் 37 பெ ஆகியவை டான்சி நிறுவனத்திலும், 38அவா டான்சிக்கு அருகில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்திற்கு (சுப்புராயலு நகர்) மாற்றப்பட்டது) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2 | திரு. ஆர். சுகந்திராஜீ, முன்னாள் நகரமன்ற உறுப்பினர், திருப்பாப்புலியூர்<br><br>02.05.2019 | வார்டு எண்.26 | வார்டு எண். 26க்கு அமைக்கப்பட்டுள்ள சதாசிவ சத்திர தெரு நகராட்சி பள்ளி வாக்கு சாவடியை, திருப்பாப்புலியூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு மாற்ற கோருதல் சார்வு. | மனு பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி வார்டில் திருமதி. விஜயலட்சுமி என்பவர் வரைவு வாக்குச் சாவடி பட்டியல்படி உள்ள வாக்குச்சாவடியை பிற பகுதிக்கு மாற்ற வேண்டாம் என மறுப்பு தெரிவித்துள்ளார். வார்டு எண் 26ல் உள்ள மொத்தம் 18 தெருக்களில் 15 தெருக்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியை சுற்றிலும் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி 43 ஆ, 43 பெ, 44 அவா ஆகிய வாக்குச்சாவடிகள் வரைவு பட்டியல்படி தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கப்பட்டது. | |
| | 3 | திருப்பாப்புலியூர், மகாத்மா காந்தி குடியிருப்போர் நலச் சங்கம், கதவு எண்.55, ஞளுசு நகர், கடலூர்<br><br>02.05.2019 | வார்டு எண்.31 | அண்ணாமலை நகர் மற்றும் ஞளுசு நகர் பகுதிக்கு, லட்சுமி சோர்டியா பள்ளியில் வாக்குச்சாவடி அமைக்க கோருதல் | ஏற்றுக் கொள்ளப்பட்டது. வார்டு எண் 31, 52 ஆ, 52 பெ, 53 அவா ஆகிய மூன்று வாக்குச் சாவடிகளும் பொதுமக்கள் நலன் கருதி, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இருந்த வாக்குச் சாவடிகள் திருப்பாப்புலியூரில் உள்ள லட்சுமி சோர்டியா மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டது. | |
| | 4 | அனைத்து குடியிருப்போர் நலச்சங்கம், 13, முசூஊ நகர், செம்மண்டலம், கடலூர்<br><br>03.05.2019 | வார்டு எண்.31 | அண்ணாமலை நகர் மற்றும் ஞளுசு நகர் பகுதிக்கு, லட்சுமி சோர்டியா பள்ளியில் வாக்குச்சாவடி அமைக்க கோருதல் | ஏற்றுக் கொள்ளப்பட்டது. வார்டு எண் 31, 52 ஆ, 52 பெ, 53 அவா ஆகிய மூன்று வாக்குச் சாவடிகளும் பொதுமக்கள் நலன் கருதி, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இருந்த வாக்குச் சாவடிகள் திருப்பாப்புலியூரில் உள்ள லட்சுமி சோர்டியா மேல்நிலைப் பள்ளியில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அமைக்கப்பட்டது. |
| 5 | அனைத்து குடியிருப்போர் நலச்சங்கம், கடலூர்<br><br>03.05.2019 | வார்டு எண் 30 | வார்டு எண் 30க்கு தற்போது வண்டிப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது அதனை மாற்றி நகராட்சி ஆரம்பப் பள்ளி, கற்பக விநாயகர் கோயில் தெரு, வண்டிப்பாளையத்திற்கு மாற்றக் கோருதல். | மனு ஏற்கப்பட்டது. வார்டு எண் 30க்கு நகராட்சி ஆரம்பப் பள்ளி, கற்பக விநாயகர் கோயில் தெரு, வண்டிப்பாளையம் என்ற இடத்திற்கு வாக்குச்சாவடி மாற்றப்பட்டது. |
| 6 | எம்.ஜி.ஆர். (எ) ஆர். ராமச்சந்திரன், 27வது வார்டு முன்னாள் நகர்மனற உறுப்பினர், மார்க்கெட் காலனி, கடலூர்.<br><br>03.05.2019 | வார்டு எண் 26 | வார்டு 26– 70 வாக்குச்சாவடியில் வரும் அமர்ந்த வாழியம்மன் கோயில் தெரு வார்டு 28 – 77 வாக்குச்சாவடியில் சேர்க்க கோருதல். வார்டு எண் 26ல் உள்ள முத்துக் கிருஷ்ணன் பிள்ளை தெரு வார்டு எண் 28ல் உள்ளதை திருத்தம் செய்ய கோரப்பட்டுள்ளது | மனு ஏற்கப்பட்டது. வார்டு மறுவரையறை பணிகள் படி அமர்ந்தவாழியம்மன் கோயில் தெரு வார்டு 28ல் இடம் பெற்றுள்ளது. மற்றும் முத்துக்கிருஷ்ணன் பிள்ளை தெரு வார்டு எண் 28ல் இருந்த பிழை திருத்தம், திருத்தம் செய்யப்பட்டு வார்டு எண் 26ல் இடம் பெற செய்யப்பட்டுள்ளது. |
| 7 | திரு. ஹசுஊ நாகராஜ், திருப்பாப்புலியூர்<br><br>04.05.2019 | 37ஆண், 37பெண் மற்றும் 38அ.வா. சுப்ராயலு நகர், திருப்பாபுலியூர் | வார்டு மறுவறைக்கு பின்னர் வார்டு எண்.23ஆக மாற்றப்பட்டுள்ளது. தற்போது அமைக்கப்பட்டுள்ள தனியார் பள்ளி வாக்குசாவடியை சுப்ராயலு நகர் டான்சிக்கு மாற்ற கோரப்பட்டுள்ளது. | மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. வாக்குச்சாவடி எண் 37 ஆ மற்றும் 37 பெ ஆகியவை டான்சி நிறுவனத்திலும், 38அவா டான்சிக்கு அருகில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்திற்கு (சுப்புராயலு நகர்) மாற்றப்பட்டது) |
| 8 | திருமதி.விஜயலட்சுமி செந்தில், 42வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்<br><br>06.05.2019 | வார்டு எண் 44 | வார்டு 42ல் உள்ள சுண்ணாம்புக் காரத் தெரு, கோரிச்சந்து ஆகிய தெருக்களை வார்டு 44க்கு மாற்றக் கோருதல். | நிராகரிக்கப்பட்டது. வார்டு மறுவரையறைபடி சுண்ணாம்புக்காரத் தெரு, கோரிசந்து ஆகியவை 42ம் வார்டுக்கு தொடர்புடையவை ஆகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | திருமதி.விஜயலட்சுமி அசோகன், 26வது வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்<br><br>06.05.2019 | வார்டு எண் 26 | வார்டு 26–ல் அமைந்துள்ள ரெட்டி சத்திரம் நகராட்சி பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியை வேறு எந்த வார்டிற்கும் மாற்ற வேண்டாம் என கோருதல் | மொத்த தெருக்களில் அதிகமான தெருக்கள் வாக்குச்சாவடி அமைவிடத்திலேயே அமைந்துள்ளதால், பொதுமக்கள் நலன் மற்றும் வார்டு தெருக்கள் அமைவிடத்தை கருத்தில் கொண்டு, வார்டு எண் 26 43 ஆ, 43பெ, 44 அவா என மூன்று வாக்குச் சாவடிகள் ரெட்டி சத்திரம் நகராட்சி பள்ளியில் அமைக்கப்பட்டது. |
| 10 | திரு.போஸ்.இராமச்சந் திரன், 10ம் வார்டு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்<br><br>07.05.2019 | வார்டு எண் 10 | வார்டு 10ல் வாக்குச்சாவடி நகராட்சிதுவக்கப் பள்ளிக்கு பதிலாக அரசு மேல்நிலை பள்ளியில் அமைக்க கோருதல் | மனு ஏற்கப்பட்டது.வார்டு எண் 10க்குரிய வாக்குச்சாவடி எண் 15 ஆண் பெண், ஆகிய இரண்டு வாக்குச்சாவடிகளும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வேணுகோபாலபுரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 11 | திரு.மதுரை முத்து களத்து மேட்டு தெரு சிவானந்தபுரம்<br><br>07.05.2019 | வார்டு எண் 34 | வாக்குச்சாவடி 59 ஆண் மற்றும் பெண் ஆகியவற்றில் உள்ள ஆறுமுகம் தெரு, சபாபதி தெரு, பரிமேலழகர் தெரு, ஒட்டக்கூத்தன் தெரு, குன்று தெரு ஆகிய பகுதிகளை வாக்குச் சாவடி எண் 61 ஆண் மற்றும் பெண் ஆகியவற்றிற்கு மாற்றம் செய்யவும் 58 ஆண், பெண் வாக்குச் சாவடிகளில் உள்ள வள்ளி நகரை 59 ஆண், பெண் வாக்குச் சாவடிகளில் மாற்றம் செய்யவும் கோருதல் | மனு நிராகரிக்கப்பட்டது. வார்டு மறுவரையறைபடி விண்ணப்பதாரர் கோரியுள்ள தெருக்கள் வார்டு எண் 35க்கு தொடர்புடையவை ஆகும். இவை 59 ஆண் 59 பெண் 60 அவா வாக்குச்சாவடிகள் ஆகும். |

| | |
|---|---|
| | மேற்படி விண்ணப்பங்கள் உரிய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, மனுதாரர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கும், நிராகரிக்கப்பட்டதற்குமான காரணங்களுடன் எட்டு கலங்கள் கொண்ட வாக்குச்சாவடி பட்டியலில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதை, மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | பதிவு செய்யலாம். |
| **25)** | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் உள்ள பகிர்மான குழாய் பதிக்கும் 17 மேல்நிலை குடிநீர் தொட்டி விநியோக வரையறை பகுதிகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளதால் குழாய் பதித்தல் பணியிலிருந்து கீழ்கண்ட பட்டியலின்படி நீக்கவும். |

| S No | Dia | Manja kuppam | Saravana Nagar | Anna Nagar | Thiruppa puliyur | Sivanatha puram | Total |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 90 PVC | | | 3918 | 2175 | | 6093 |
| 2 | 110 PVC | | | | 80 | | 80 |
| 3 | 100 DI | | | | 3523 | 849 | 4372 |
| 4 | 150 DI | | | | 320 | | 320 |
| 5 | 200 DI | 1537 | | | | | 1537 |
| 6 | 250 DI | 1052 | 450 | | | | 1502 |
| 7 | 300 DI | 50 | | | 948 | | 998 |
| 8 | 350 DI | | | | 915 | | 915 |
| 9 | 400 DI | 30 | 360 | | | | 390 |
| 10 | 450 DI | | | | | | 0 |
| TOTAL | | 2669 | 810 | 3918 | 7961 | 849 | 16207 |

மேற்கண்ட நீக்கப்பட்ட குழாய் பதிப்பில் உள்ள குழாய்களில் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் விநியோகம் இல்லாத புதிய இடங்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி குடிநீர் குழாய் பதிக்கவும் இப்பணியை தமிழ்நாடு குடிநீர் வாரியம் மூலம் செயல்படுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**புதியதாக குழாய்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களின் விபரம்**

| வ எண் | தெரு / நகர் பெயர் | வார்டு எண் | நீளம் (மீட்டர்) | உத்தேசிக்கப் பட்டுள்ள குழாய் விட்ட அளவு | பிரதான குழாயில் இணைப்பு ஏற்படுத்தப்பட உள்ள இடம் மற்றும் மேல்நிலை குடிநீர் தொட்டி விநியோக பகுதி | |
|---|---|---|---|---|---|---|
| 1 | S M நகர் | 12 | 150 | 90 மிமீ PVC | 90மிமீ PVC | நேரு நகர் |
| 2 | மெய் கண்டார் தெரு | 14 | 200 | 90 மிமீ PVC | 300 மிமீ AC | மாநில நெடுஞ்சாலை – கேகே நகர் |
| 3 | கமலம்மாள் நகர் | 15 | 300 | 90 மிமீ PVC | 110 மிமீ PVC | நகராட்சி சிமெண்ட் சாலை – கேகே நகர் |
| 4 | ஸ்ரீ ராமுலு நகர் | 23 | 400 | 90 மிமீ PVC | 90 மிமீ PVC | நகராட்சி சிமெண்ட் – சாலை கம்மியம் பேட்டை |
| 5 | அர்த்தநாரீஸ்வரர் நகர் | 23 | 350 | 90 மிமீ PVC / 100 DI | 150 மிமீ DI | மாநில நெடுஞ்சாலை – கம்மியம் பேட்டை |
| 6 | சண்முகா நகர் | 22 | 300 | 90 மிமீ PVC | 110 மிமீ PVC | நகராட்சி சிமெண்ட் சாலை திருப்பாப்புலியூர் |
| 7 | கண்ணயா நகர் | 29 | 180 | 90 PVC | 90மிமீ PVC | நகராட்சி தார் சாலை – சரவணா நகர் |
| 8 | அப்பர் நகர் | 29 | 250 | 90 PVC | 90மிமீ PVC | நகராட்சி தார் சாலை – சரவணா நகர் |
| 9 | முருகன் நகர் பங்கஜம் கார்டன் | 30 | 200 | 90 PVC | 90மிமீ PVC | நகராட்சி சிமெண்ட் சாலை – சரவணா நகர் |
| 10 | செல்வ வினாயகர் நகர் | 30 | 350 | 90 PVC | 300 AC | நகராட்சி தார் சாலை – சரவணா நகர் |
| 11 | ஜெய சரஸ்வதி நகர் | 32 | 350 | 90 PVC | 90 PVC | நகராட்சி சிமெண்ட் சாலை – சரவணா நகர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | தேவநாத சாமி நகர் | 32 | 300 | 90 PVC | 90 PVC | நகராட்சி சிமெண்ட் சாலை – சரவணா நகர் |
| 13 | கடல் நகர், RV நகர் | 32 | 350 | 90 PVC | 90 PVC | நகராட்சி சிமெண்ட் சாலை – சரவணா நகர் |
| 14 | நேதாஜி நகர் | 34 | 250 | 90 PVC | 90 PVC | நகராட்சி சிமெண்ட் சாலை திருப்பாப்புலியூர் |
| 15 | சுப்பிரமணிய நகர் | 45 | 250 | 90 PVC | 300 DI | தேசிய நெடுஞ்சாலை பச்சையாங் குப்பம் |
| 16 | ஆணைக்குப்பம் ரோடு | 13 | 250 | 150 DI | 150 DI | நகராட்சி சிமெண்ட் சாலை அண்ணா நகர் |
| 17 | வண்ணாரப் பாளையம் மெயின் ரோடு (தெற்கு பகுதி ) | 14,15 | 600 | 150 DI | 150 DI | மாநில உள்ளூர் நெடுஞ்சாலை |
| 18 | அப்பாதுரைசெட்டி தெரு சந்திப்பு முதல் தேவனாம் பட்டினம் சுனாமி குடியிருப்பு வரை | 15 | 400 | 100 DI | 90 PVC | நகராட்சி சிமெண்ட் சாலை |
| 19 | நபிகள் நாயகம் தெரு | 18 | 500 | 100 DI | 110 PVC | நகராட்சி சிமெண்ட் சாலை |
| 20 | KK நகர் to NN நகர் | 14 | 200 | 90 PVC | 90 PVC | நகராட்சி தார் சாலை |

| | |
|---|---|
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் |
| **26)** | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் உள்ள பகிர்மான குழாய் பதிக்கும் 17 மேல்நிலை குடிநீர் தொட்டி விநியோக வரையறை பகுதிகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளதால் குழாய் பதித்தல் பணியிலிருந்து கீழ்கண்ட பட்டியலின்படி நீக்கவும். |

| S No | Dia | Manja kuppam | Saravana Nagar | Anna Nagar | Thiruppa puliyur | Sivanatha puram | Total |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 90 PVC | | | 3918 | 2175 | | 6093 |
| 2 | 110 PVC | | | | 80 | | 80 |
| 3 | 100 DI | | | | 3523 | 849 | 4372 |
| 4 | 150 DI | | | | 320 | | 320 |
| 5 | 200 DI | 1537 | | | | | 1537 |
| 6 | 250 DI | 1052 | 450 | | | | 1502 |
| 7 | 300 DI | 50 | | | 948 | | 998 |
| 8 | 350 DI | | | | 915 | | 915 |
| 9 | 400 DI | 30 | 360 | | | | 390 |
| 10 | 450 DI | | | | | | 0 |
| TOTAL | | 2669 | 810 | 3918 | 7961 | 849 | 16207 |

மேற்கண்ட நீக்கப்பட்ட குழாய் பதிப்பில் உள்ள குழாய்களில் கீழ் மீதம் உள்ள குடிநீர் குழாய்களை நகராட்சியின் பொறுப்பில் உள்ள தலைமை தண்ணீர் நிலையங்களில் கீழ்கண்ட விவரப்படி உள்ள ஆழ்துளை கிணறு நீர் மின் மோட்டார்களின் நீர்கடத்தி குழாய்களான கல்நார் குழாய்களைDI குழாய்களாக மாற்றி அமைத்து நகராட்சிவசம் ஒப்படைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எ ண் | தெரு / நகர் பெயர் | வார்டு எண் | நீளம் (மீட்டர் ) | உத்தேசிக்கப் பட்டுள்ள குழாய் விட்ட அளவு | பிரதான குழாயில் இணைப்பு ஏற்படுத்தப்பட உள்ள இடம் மற்றும் மேல்நிலை குடிநீர் தொட்டி விநியோக பகுதி |
|---|---|---|---|---|---|
| 21 | திருவந்திபுரம் தலைமை தண்ணீர் நிலைய ஆழ்துளை கிணறுகளின் நீர் கடத்தி குழாய்களுக்கு மாற்றாக | – | 1500<br>1500 | 200DI<br>250DI | 200AC, 200CI |
| 22 | திருவந்திபுரம் தலைமை தண்ணீர் நிலைய குடிநீர் உந்து குழாய் – II (தீபன் நகர்) | – | 915 | 350DI | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | திருவந்திபுரம் தலைமை தண்ணீர் நிலைய குடிநீர் உந்து குழாய் – II (தீபன் நகர்) – கம்மியம் பேட்டை – செம்மண்டலம் இணைப்பு சாலை முதல் தீபன் நகர் மேல்நிலை தொட்டி வரை பதித்தல் பணி | – | 390 | 400DI | – |

மேற்கண்ட 1,2,3 வரிசையில் உள்ள விபரப்படி 200 DI, 250 DI, 350 DI,400 DI குழாய்களை நகராட்சி வசம் ஒப்படைத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தெரிவிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றம் அனுமதிக்கலாம்

கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 45 வார்டுகளில் குடிநீர் இணைப்பு சரிபார்த்தல் பணிக்காக மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் செயல்முறை கடித எண் . அ4/99/2019 நாள் 07.05.2019 ன் நடவடிக்கையின் படியும், கண்காணிப்பு அலுவலர்/ திட்ட இயக்குநர், மகளிர் திட்டம், கடலூர் அவர்களால் இந்நகராட்சியில் 08.05.2019–ல் நடத்தப்பட்ட கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி அலுவலர்களுடன், மகளிர் திட்ட அலுவலக களப் பணியாளர்களும் வார்டு வாரியாக தனி நபர் குடிநீர் இணைப்புகளில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளை கண்டறிந்து அதனை துண்டித்திடவும், முறையான குடிநீர் இணைப்பில் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் உறிஞ்சும் தனி நபர்களின் இணைப்பை உடன் துண்டித்திடவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விவரப்படி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வீடு வீடாக கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ள, படிவங்களை கடலூர் கூட்டுறவு அச்சகத்தின் மூலம் அச்சடிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.20,000/– க்கும் இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 30.05.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
கடலூர் பெருநகராட்சி.